# பகுத்தறிவியக்கத்தின்
# பழமை

ஆசிரியர்
ஜீவபந்து T. S. ஸ்ரீபால்

சென்னை
மஹாவீர ஜைன சங்க வெளியீடு.

272
D05

இந்நூல் :

பகவான் மகாவீர சுவாமிகளின்

2547-ம் ஆண்டு

பிறந்த நாள் விழாவின்

அன்பளிப்பு.

**21—4—1948**

# பகுத்தறிவியக்கத்தின்

# பழமை

ஆசிரியர்

**ஜீவபந்து - T. S. ஸ்ரீபால் அவர்கள்**

வெளியிட்டோர்

**மகாவீர ஜைன சங்கம்**

(Veer Sang)

2/2, பெரிய நெய்யக்காரன் தெரு, சென்னை.

1948

மகாவீர சகாப்தம் 2547

அருட்பெருஞ்ஜோதி

அச்சகம், சென்னை—1

# பதிப்புரை

தமிழ் நாட்டிற்கு இச் சிறிய நூலினை மகாவீர ஜைன சங்கத்தின் (Veer Sang) வெளியீடாக அறி முகப்படுத்துகின்றோம். திராவிட நாகரிகத்தின் பழமையையும் மேன் மையையும் விளக்கும் இவ் ஆராய்ச் சிக் கட்டுரை **திரு. ஜீவபந்து, T. S. ஸ்ரீபால்** அவர்களால் எழுதப் பட்டு, அருட்பெருஞ்ஜோதி, போர் வாள், மும்மணி முதலிய பத்திரி கைகளில் வெளிவந்தது. இக்கட் டுரையைத் தமிழ்நாட்டு ஜைன சமயத் தலைவரும் அறிஞருமாகிய உயர்திரு. **ராவ்பகதூர் A. சக்கிர வர்த்தி நயினார்** M.A. I.E.S. (Rtd) அவர்கள் நன்கு பாராட்டி மகிழ்ந் தார்கள். மேலும் இக்கட்டுரையைப் பத்திரிகைகளில் வாசித்த பல அறிஞர்கள் இதனை நூல் வடிவாக அச்சிட்டு வெளியிடின் ஜைன (சமண) சமயத்தின் வரலாற்றுண் மைகளையும் சிறப்பாகத் திராவிடர் பண்பாட்டினையும் பலரும் அறிந்து கொள்வதற்கு உதவியா யிருக்கு மெனப் பணித்தார்கள். எனவே

எங்கள் சங்கம் மகாவீர ஜெயந்தியின் நினைவாக இந்நூலினை வெளியிட மகிழ்ச்சியுடன் முன்வந்தது. எங்கள் உள்ளக்கருத்தை அன்பர் ஸ்ரீபால் அவர்களும் வரவேற்றுப் பல புதிய கருத்துக்களையும் அத்துடன் சேர்த்து எழுதித் தந்தார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி யறிதல் உரித்தாகுக.

சமண சமயப் பெரியோர்கள் உலகக் கலைக்கும் மக்கள் பண்பாட்டிற்கும் செய்திருக்கும் அரும்பெருங் கலைச் செல்வங்களைப் பற்றிப் பல அறிஞர்களும் சிறப்பாகத் தமிழ் நாட்டுப் புலவர் பெருமக்களும் வரலாற்று ஆசிரியர்களும் நன்கு அறிவார்கள். எனவே மறைக்கப்பட்ட இத்தகைய புதைச் செய்திகளையுங் கலைகளையும் தமிழ்நாட்டு அறிஞர்கள் பலரும் நன்கு ஆராய்ந்து பலநூல்களை எழுதி உதவுவார்களாயின் அவைகளை எங்கள் சங்கம் மகிழ்வுடன் ஏற்று அச்சிட்டு வழங்கக் கடமைப்பட்டிருக்கிறதென்பதை வணக்கத்துடன் அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
மகாவீர ஜைன சங்கத்தார்.

# பகுத்தறி வியக்கத்தின் பழமை

இன்று எங்நாட்டிலும் பகுத்தறிவியக்கம் பரவுகிறது. அறிவுக்கு சுதந்திரம் வேண்டுமெனப் பல அறிவாளிகள் மதவாதிகளுடன் போராடுகின்றனர். எத்தகைய பேரறிஞராயினும் அவர் கூறுவனவற்றை அப்படியே ஒப்புக்கொள்வதென்பதைத்தற்கால அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. கண்கள் எவ்வாறு புறப்பொருள்களைத் தெளிவாக அறிகின்றனவோ அவ்வாறே நூற்பொருள்களின் உண்மைகளை நன்கு ஆராய்ந்து அறிய வேண்டும் என்ற உணர்ச்சி மக்களிடை இதுபோது பெரிதும் பரவி வருகின்றது. இவ்வுணர்ச்சி பெரும்பாலும் புரட்சி மனப்பான்மை கொண்டவர்களிடையே தான் வளர்கின்றது. மதவாதிகளாயினும் சரி, அரசியல் வாதிகளாயினும் சரி பகுத்தறிவாளர் கொள்கைகளுக்குச் செவிசாய்க்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இவ்வியக்கம் மேல் நாடுகளில் வேரூன்றி விட்டது. கீழ்நாடுகளிலும் நன்கு வளர்ச்சி பெற்று வருகின்றது. எனவே இத்தகைய பகுத்தறி வியக்கம் தோன்றின பழமையும் அது தோன்றிய நாட்டையும் தோற்றுவித்த

அறிஞனையும் பற்றிச் சிறிது ஆராய வேண்டு வது இன்றியமையாததாகும்.

நமது தமிழ் மறையாகிய திருக்குறள், கடவுள் வாழ்த்தின் முதற் குறள் ஆதி பகவனைப் பற்றிக் கூறுகின்றது. மற்ற ஒன்பது குறள் களிலும் அவ் ஆதிபகவானின் நற் பண்புகள் வருணிக்கப் பட்டுள்ளன. ஆதிபகவான் என்ப தனாலேயே அவருக்குப் பின்னர்ப் பலர் அவ் வாறே விளங்கினர் என்பது பெறப்படுகின் றது. ஆகவே அவர் முதல்வ ராகின்றார். ஜைன (சமணம்) சமய நூல்களில் ஆதி பகவானைப் பற்றிய அரிய வரலாறுகள் நமக் குக் கிடைக்கின்றன. ஆதிபகவான் எனப் பேசப்படுபவர் நம்மைப்போன்று தாய் தந்தை யர் வயிற்றில் பிறந்தவரே. மனைவி மக்களு டன் வாழ்ந்தவர். அரசர் குலத்தலைவர். *அகர முதல வெழுத்துக்களையும் ஒன்று முதலாய எண்களையும் தோற்றுவித்த முதல் ஆசிரியர். வாள், வரைவு, உழவு, வாணிபம், கல்வி, சிற் பம் ஆகிய அறு தொழில்களையும் கற்பித்த சமுதாய அமைப்பாளர். இல்லறம் துறவறம் ஆகிய இரண்டு அறங்களையும் வகுத்த அற வாழி அந்தணர். அஹிம்ஸா தருமத்தின் தந்தை. துறவறம் பூண்டு ஐம்பொறிகளையும்

* எண்ணெழுத்திரண்டும் இயம்பிய ஆதிமூர்த்தி

—சூடாமணி நிகண்டு

வென்றவர். வினையின் நீங்கி விளங்கிய அறிவர். மாசி கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியன்று கைலாசத்தில் நிர்வாண மெய்தியவர். அதாவது பேரா இயற்கை அல்லது பிறவா யாக்கைப் பெரியோரானவர். **சித்தன், சிவன், சிவகதி நாயகன்** எனப் போற்றப்பட்டவர். அவர் நிர்வாண மெய்திய நாள்தான் இன்றும் **சிவராத்திரி** யெனப் புனிதமாகக் கொண்டாடப்படுகிறது.

இவரே தமிழ் நூற்களால் ஆதிபகவன், ஆதிநாதர், ஆதிதேவர் எனப் புகழப் படுகின்றார். அவர்தம் இயற்பெயர் **விரஷப தேவர்** என்பது.

**விரஷபதேவர்** சமண நூல்கள் பலவற்றிலும் வைதீக சம்பந்தமான வேதங்களிலும், பாகவதம், வராக புராணம், அக்கினி புராணம் முதலிய நூல்களிலும் சிறப்பாக இடம் பெற்றுள்ளார். விரஷபதேவர் கொள்கை தங்கள் சமயக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பாடாக விருந்தும் அவர்தம் இயக்கம் அறிவிற்கும் மக்கள் பணபிற்கும் இன்றியமையாதனவாய் அமைந்துள்ளமையால் அவரையும் தங்கள் கடவுளின் அவதாரங்களில் ஒருவராக ஆரியர்கள் மேலே கூறிய பாகவதம் முதலிய தங்கள் வைதீக நூல்களில் போற்றியுள்ளார்கள். தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண

சுந்தரனர் அவர்களின் நடுநிலைமை தவரு இயல்புரைகளிலும், கட்டுரைகளிலும், சிறப் பாக "மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்" என்ற அவர்தம் அரிய நூலிலும் **விரஷப தேவர்** காட்சியளிப்பதைக் காணலாம்.

விருஷபதேவர் பேரறிஞர். தாம் கண்ட மெய்ப் பொருள் விளக்கத்தைப் பலருக்கும் போதித்து வந்தார். அவர்தம் சொற்பொழி வின் முடிவில் "எனது அறவுரைகளை அமைதி யாகவும் ஆவலாகவும் கேட்டுவந்தீர்கள். நீங்கள் என்னை ஓர் தெய்வீக புருஷனுகப் போற்று கின்ற காரணத்தால் நான் கூறிய அறிவுரைக ளனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென நினைக்காதீர்கள். நிறுத்து, அறு த்து, சுட்டு, உரைத்துப் பொன் கொள்வார் போல எனது உரைகளையும் உங்கள் பகுத்தறி வால் நன்கு ஆராய்ந்து உண்மைப் பொருளைத் தெளியுங்கள். அதன் பின்னர் அவ்வற நெறி யில் நின்று உய்யுங்கள்' என்று மொழிவார். இந்நிலைகளை முறையே நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்றழைக்கப்படும் என மக்க ளது அறிவிற்குப் பூரண சுதந்தரமளித்தும் பேசுவார். இவ்வுண்மையை **"மெய்ப்பொருள் தேறுதல் நற்காட்சி என்றுரைப்பர், எப் பொருளுங் கண்டுணர்ந்தார்."** என அருங் கலச் செப்பு ஆசிரியரும்,

"மெய்ப் பொருடெரிதல் மற்றப் பொருண்மிசை விரிந்தஞா
மப்பொருள் வழாத நூலினருந்தகை யொழுக்கந்தாங்கி [ன
யிப்பொருளிவைகள் கண்டாயிறைவனுல் விரிக்கப்பட்ட
கைப்பொருளாகக் கொண்டு கடைப்பிடிகன பொருமரோய்"

எனச் சூளாமணி ஆசிரியராய தோலாமொழித் தேவரும் கூறியவற்றால் தெளியலாம்.

கடையிலா அறிவினுல் விளங்கிக் குற்றமற்ற அறங்களையேபோதித்த விருஷபதேவர், தம் உரைகளையும் நன்கு ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும்படி கூறியருளிய அவர்தம் இணையற்ற சான்றாண்மையைக் கண்ட பேரறிவாளர்கள்,

*"தீதில்லா நயமுதலாத் திருந்திய நல்லளவைகளாற்
கோதில்லா வரும்பொருளைக் குறைவின்றி யறைந்ததற்பின்
பேதில்லா வியற்காட்சி யருளியதுன் பெருமையோ"

எனப் போற்றித் துதித்திருக்கின்றனர்.

எனவே, எத்தகைய பேரறிஞராயினும் சரி அவர் கூறுவனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் நமது அறிவால் நன்கு ஆராய்ந்தே அப்பொருளின் உண்மையைக் கோடல் வேண்டுமென்ற பகுத்தறிவியக்கத்திற்கு அடிகோலியவர் **விரஷபதேவரே யாவர்.**

---

*யாப்பருங் கலவிருத்தி 83-ம் சூத்திரத்தின் உரைமேற்கோள்

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும்

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும்

திருக்குறளில் தேவரும் மொழிந்தமை காண்க.

விரஷப தேவர் (ஆதிபகவான்) பகுத்தறிவை அடிப்படையாக வைத்து அறம் வகுத்தாராகையால் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களில் ஈடுபடுவதும், அவதாரங்கள் பல எடுப்பதும் அடியார்களுக்குப் பரிந்து வருவதும், சோதிக்க வருவதுமாகிய திருவிளையாடல்களைப் புரியும் கடவுளைப்பற்றி யாண்டும் பேசவில்லை. அறிவிற்குப் பொருத்தமில்லாத எந்தக் கொள்கைகளையும் அவர் எங்கும் உபதேசிக்கவில்லை. மக்கள் பண்பிற்கும் வாழ்விற்கும், உயர்விற்கும் வேண்டிய அறங்களையே வற்புறுத்திச் சென்றார். நிறைந்த அறிவு நிலை பெற்று இருவினைகளினின்றும் நீங்கிய உயிரே கடவுள் என நவின்றார். அவ்விரு வினைகளின் நீக்கத்திற்கும் மேலே கூறிய நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மூன்றுமே துணையாகுமென மொழிந்தார்.

இதனை சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர்,

"மெய்வகை தெரிதல்ஞானம் விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய்வகையின் றித்தேறல் காட்சியைம் பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயா தொழுகுத லொழுக்க மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே இருவினைக் கழியுமென்ருன்"

என விளக்குகின்ருர்.

"தன்னிற் பிறிதில்லை தெய்வம் நெறிநிற்பில்
ஒன்ருனுந்தானெறி நில்லானேல்—தன்னை
இறைவனைச் செய்வானுந்தானே தான் தன்னைச்
சிறுவனைச் செய்வானுந்தான்"

என்று அறநெறிச்சாரமும் பகர்கின்றது. அவர் தம் அறவுரைகள் ஓம குண்டத்திலே வீழ்ந்து மூட நம்பிக்கைகளெனுந் தீயை மூட்ட வில்லை. மக்கள் வாழ்க்கையிலே நின்று உலகை மாண்புடன் வளம்பெறச் செய்தன. எனவே, மக்கள் அவர் தம் அறிவியக்கத்தை ஆர்வத்தோடு ஏற்றனர். அவ்வியக்கம் இன்று வரை மக்களிடை நன்கு வளர்ந்து வருகிறது.

இத்தகைய பகுத்தறிவுக் கொள்கையைத் திராவிடர் பண்பு எனக் கூறுதல் மிகை யாகாது. வரலாற்றுப் பேராசிரியர்களின் ஆராய்ச்சிப்படி திராவிட நாகரிகம் இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் பரவி யிருந்த தென்பதை அறிகின்ருேம். மொஹஞ் சதாரோ, ஹரப்பா ஆகிய விடங்களில் அகழ்ந் தெடுக்கப்பெற்ற புதை பொருள்களில் நிர்வா ணமாக ஒரு யோகி யிற்கும் நிலையாகப் பல உரு

வங்கள் காணப்படுகின்றன. அவைகள் விரஷபதேவருடைய சிலையாகவோ அல்லது வேறு ஜைன தீர்த்தங்கரருடைய சிலையாகவோ இருக்கவேண்டுமென பல அறிஞர்கள் முடிவுசெய்திருக்கின்றனர். மேலும் அங்கு கிடைத்துள்ள *முத்திரைகளில் 'ஜினேஸ்வரா' அல்லது 'ஜினேசா' எனப் பொறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஸ்வஸ்திகங்களும், ஜெயினமந்திரங்களும் பொறிக்கப்பட்ட பல முத்திரைகள் காணப்படுகின்றன. எனவே இவை நமது ஆராய்ச்சிக்குப் பெருந்துணை செய்கின்றன. மேலும், இதனை உறுதிப்படுத்த பகவத் கீதை சான்று பகர்கின்றது. அர்ச்சுனன் அஹிம்சா தருமத்தில் முழு நம்பிக்கை கொண்டவனுகிப் போர் தொடுக்க மறுக்கின்ருன்; கொலை செய்யக் கூசுகின்ருன். உறவினர்கள், குருமார்கள் பேரில் அம்பைத் தொடுக்க மனம் எழவில்லை. இதனைக்கண்ட கிருஷ்ணன், †"அர்ச்சுன! அச்சத்தோடு கூடிய இந்த இழி நிலையில்

---

* இம் முத்திரைகளின் விவரங்கள் கீழ்க்கண்ட ஆங்கில புத்தகத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

'The Scripts on the Indus Valley Seals' by Dr. Pran Nath D. Sc. (Lond) Ph. D. (Vienna), in The Indian Historical Quarterly, Vol. VIII.

† பகவத் கீதை, இரண்டாவது அத்தியாயம், இரண்டாவது ஸ்லோகம்.

உன்னை மயக்குவது அஹிம்சா தருமமேயாகும். அஃது நமது கொள்கை யன்று; அநாரியர் கொள்கை,'' எனக் கூறுகின்றார். இக்கூற்றுப்படி அஹிம்ஸா தருமமும் அதன் கர்த்தாவாகிய விரஷபதேவரும் (அநாரியர்) ஆரியரல்லாதவர் எனப் பெறப்படுகின்றது. அநாரியர் என்றபோதே திராவிடர் என்பது சொல்லாமல் விளங்கும். இவை யனைத்தையும் மெய்ப்பிக்க விரஷபதேவருடைய பட்டத்தரசிகள் நமக்குப் பெருஞ்சான்ருக விளங்குகின்றனர். விரஷபதேவருடைய இரு பட்டத்தரசிகளும் விஞ்சையர் மாதர்கள். விஞ்சையர் (வித்தியாதரர்) என்பவர்கள் அனைவரும் திராவிட மக்களே யாவர், இவ்வுண்மையை இராவணன், வாலி முதலியவர்களின் வரலாற்ருலும், சிலப்பதிகாரம், சீவக . சிந்தாமணி, சூளாமணி முதலிய சமண நூல்களாலும் அறியலாம். விரஷபதேவருடைய முதல்பட்டத்தரசியாரின் வயிற்றிற் பிறந்த முதற் புதல்வன் பரதனுவான். அப்பரதனே இந்நாடு முழுமையும் அறவழியில் ஆண்ட முதற் சக்கிரவர்த்தியாகையால், இந்நாட்டிற்கு அவர் தம் பெயராலேயே பரத கண்டம் என்ன வழங்கலாயிற்று.

மொழியிலும் ஒற்றுமைகாணலாம். எழுத்து எண் இரண்டையும் விரஷப தேவரே முதல் முதல் தோற்றுவித்தார் என முன்னரே கூறி

யுள்ளோம். அவ்விரண்டையும் முறையே பிராமி, சுந்தரி என்ற தம் இரு குமாரத்திகளின் மூலமாகவே அவர் ஆரம்பித்து வைத்தார். அதனாற்றான் அவ்வெழுத்துக்களுக்கும் பிராமி எழுத்து என வழங்கலாயிற்று. அப்பிராமி எழுத்துக்களுக்கும், தமிழ் எழுத்துக்களுக்கும் வரி வடிவில் நெருங்கிய ஒற்றுமை உண்டென்றும் பெயரில் தான் வேற்றுமையென்றும் பல ஆராய்ச்சி அறிஞர்கள் கண்ட முடிபு. எனவே விரஷபதேவரின் மொழி இயல்பிலும் திராவிடக் கதிரொளியே வீசுகிறது.

இவ்வுண்மைகளை மேல்நாட்டு வரலாற்று ஆசிரியர்களும் பல சான்றுகளுடன் மெய்ப்பித்துள்ளனர். ஆகவே, ஆதிகால வரலாற்றுப்படி அயோத்திமா நகரில் பிறந்த விரஷப தேவர் (ஆதிபகவான்) திராவிடரே என்பதும், அவரே மெய்யுணர்வு அல்லது பகுத்தறிவியக்கத்தின் முதல்வர் என்பதும், உறுதிப்படுகின்றன.

கி. மு. 454-ம் ஆண்டில் கலிங்க நாட்டிலிருந்த விரஷபர் சிலையை மகத நாட்டரசன் நந்தவர்த்தனன் என்பவன் கவர்ந்து சென்று பாடலிபுரத்தில் வைத்ததும், பின்னர் கலிங்க நாட்டுப் பேரரசன் காரவேலன் மகத நாட்டின்மீது படையெடுத்து வெற்றி கண்டு

அச்சிலையை மீட்டுக்கொண்டு வந்து தனது நாட்டில் பிரதிஷ்டா மகோற்சவம் செய்தானென்பதும், அவ்விழாவிற்கு தமிழ் நாட்டுப் பேரரசன் **பாண்டிய மன்னன்** தன் பரிவாரங்களுடன் சென்று சிறப்பியற்றினன் என்பதும் கி. மு 170-ல் உதயகிரி மலையில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுச் செய்தியால் அறிகின்றோம். இதனால் விரஷபதேவர் திராவிட மக்களால் நன்கு போற்றப்பட்டவர் என்பதும் புலனாகின்றது.

தற்சமயம் நமது தேசீய இந்திய சர்க்கார் நிதி மந்திரியாக விளங்கும் திரு ஸர். R K. சண்முகம் செட்டியார் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் நடந்த மகாவீர ஜெயந்தி விழா அன்று தலைமைவகித்துப் பேசுகையில் "ஆரியர் வருவதற்கு முன்னர் நமது நாட்டில் திராவிட நாகரிகமே எங்கும் பரவி இருந்ததென்றும், அது சமண சமயக் கொள்கையாகவே இருந்திருக்கவேண்டுமென்றும், அதை நான் பூரணமாக நம்புகிறேன்" என்றும் கூறிய ஆராய்ச்சிஉரை நமது கொள்கைக்கு மிகமிக அரண் செய்கிறது. அறிவியக்கத்தின் தந்தையாக விரஷப தேவர் விளங்கியமையால் அவரை அறிவர் என்றே போற்றினர். வடநூலார் கேவலஞானி எனக் கூறுவர். திருக்குறளாசிரியர் **வாலறி**

வன் எனப் புகழ்ந்துள்ளார். விரஷபதேவர் வினைகளை வென்று வீடு பேறு பெற்றமையால் அவரை தொல்காப்பியர் "வினையின் நீங்கி விளங்கிய அறிவன்" எனப் போற்றியுள்ளார். எனவே அறிவர் இயக்கம் அகில இந்தியாவி லும் பரவிற்று. எங்கும் அறவோர் பள்ளிகள் எழுந்தன. தமிழகத்திலும் அவ்வாறே பள்ளி களும், அறிவர் கோயில்களும் அமைக்கப் பட்டன.

நமது தொண்டமண்டலப் பகுதிக்கு அறி வர்நாடென்றே பெயர் வழங்கலாயிற்று. புதுக் கோட்டை சித்தன்ன வாசலுக்கடுத்த ஒரு கோயிலின் கல் வெட்டில் அறிவர் கோயில் எனப் பொறிக்கப்பட்டுள்ளது. அங்கே அறி வர் சிலையும் அழகாகக் காட்சியளிக்கின்றது. தமிழகம் இந்த அறிவியக்கத்திற்குத் தாயக மாய் விளங்கிற்று. ஆகவே, இங்கு பல பேரறி ஞர்கள் தோன்றினர். அரும்பெருங் காவியங் களையும், நீதி நூல்களையும் இயற்றினர். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் பற்பல கலைகளையும் வளர்த்துத் தமிழ்த் தாயை அலங் கரித்தனர். மக்கள் அனைவரும் பெருமகன் திருமொழி பிறழா நோன்பினராயினர். தேவ மூடம், பாஷண்டி மூடம், லோக மூடம் ஆகிய மும்மூடங்களையும் அகற்றி அறிவாலும் ஒழுக் கத்தாலும் சிறந்தனர்.

•

"விரையார் மலர்மிசைவருவார் திருவறம்விழைவார்
கொலைவினைவிழையார் பொய்
யுரையார் களவினையொழுகார் பிறர்மனையுவவார்
**மிகுபொருள்உவவார்** வெஞ்
சுரையால் உணர்வினையழியார் அழிதசைதுவ்வார்
விடமென வெவ்வாறும்
புரையார் நறவினை நுகரார் இரவுணல்புகழார்
குரவரை யிகழாரே" —திருக்கலம்பகம்.

என்ற இறைவன் திருமொழிப்படி கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர் மனை நயவாமை, கள் குடியாமை, ஊன் உண்ணாமை முதலிய நல்லொழுக்கங்களுடன் **மிகுபொருள் உவவாமையை** மேற்கொண்டு மக்கள் பகுத்துண்டு வாழ்ந்தமையால் நாட்டில் பொருளாதார நிலை பொதுவுடைமையாக விளங்கிற்று.

பொதுவுடைமைத் தத்துவத்தை ஐம்பெரும் விரதங்களில் ஒன்றாக அமைத்து அறம் வகுத்தவர்கள் வேறெந்த சமயங்களிலும் இல்லை. விரஷபதேவர் நிலையாமையை வற்புறுத்தியதும் இக்காரணத்திற்காகவே தான். இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகிய மூன்றும் மக்களின் ஆசையை அளவுபடுத்துவதற்காகவே யன்றி துறவறத்திற்கு மாத்திரமல்ல. மக்களுக்கு ஆசை இயற்கையாகவே அமைந்திருப்பினும் அது அதிகரித்துப் பேராசையாகப் பரிணமிக்கும்

போது அவர்கள் தங்கள் நிலையினின்றும் தவறிவிடுகின்றனர் தங்கள் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள எத்தகைய தீயசெயல் களிலும் ஈடுபட்டு விடுகின்றனர். மதக்கொள் கைகளை மதிப்பதில்லை. சுற்றம் நட்பு இரண்டும் அவர்கள் அகராதியில் காண முடியாது. நடு நிலைமை யெனும் அறக்கோட்டையை தகர்த்து விடுவர். பிறருடைய இன்னல்களைச் சிறிதும் பொருட்படுத்த மாட்டார்கள். பொதுநல நன்மை அவர்கள் கண்களில் புலப்படாது. சுயநலமே உருவாகிக் கல்நெஞ்சராகிவிடுவர். சிலர் தங்கள் நலத்தில்கூட அக்கரைகொள்ள மாட்டார்கள். இவர்களும் மக்கள் சமுதாயத்தில் வாழ்பவர்கள்தான். இவர்களை எவ்வாறு திருத் துவது ? இத்தகைய மனப்பான்மையுடைய மக்களின் மனத்தை மாற்றவே நிலையாமைத் தத்துவம் துணைபுரிகின்றது. செல்வமும் இள மையும் யாக்கையும் என்றும் நிலையா வென்ற எண்ணம் உள்ளத்தில் உதித்தவுடன் ஆசை வயப்பட்டு அநீதியில் செல்பவர்கள் அதிர்ச்சி யுறுவார்கள். தங்கள் இழிசெயலை எண்ணி வெட்கமுறுவர். இரக்கம் இடம்பெறும். இந்த வாழ்வு சதமா ! எத்தனை நாளைக்கு நிலைக்கும்! இறக்கும்போது இவைகளில் ஒன்றும் தொட ர்ந்துவரப் போவதில்லையே ! இதற்காகவா பிறரை வஞ்சிப்பது! நம்மால் பாதிக்கப்பட்ட

வர்களின் மனம் என்ன பாடுபடும்! இவ்வளவு மக்களையும் ஏமாற்றி நாம் அடையப்போகும் பயன்தான் என்ன? பாவம்! அவர்களும் நம்மைப் போன்றவர்கள் தாமே! சீச்சீ! என்னே அறியாமை! பாழான பேராசையன்றோ பிறர் துன்பங்களை மறைத்து விட்டது! உலகிற்கு ஒரு நன்மையும் செய்ய வொட்டாமல் தடுத்துவிட்டது என்றெல்லாம் எண்ணிப் புழுங்குவர். அறிவின் வழி நிற்பர்! அற நெறி புகுவர்! சுயநலப் பேயைவிரட்டுவர்! நடுநிலைமையை நாடுவர்! இத்தகைய காட்சிகளை மனித வாழ்க்கையில் ஆண்டி முதல் அரசன்வரை காணலாம்! ஆகவே விரஷப தேவர் இந்நிலையாமைத் தத்துவத்தைத் தனது வாழ்க்கையில் நடத்திக் காண்பித்தார். இல்லறத்தில் பலகாலம் வாழ்ந்தார். ஆசைக்கோர் அளவுவைத்து வாழ்க்கையை நடத்தினர். மன்னுயிர்களின் நலனே தம்முடைய நலனெனக் கொண்டு அரசுரிமையைக் கடமையாக ஏற்றுக் காவல் புரிந்தார். மண்ணினுக்கிருளைப் போக்கும் கண்ணென்ன விளங்கினர். செவிகளின் பக்கமாக நரைகள் தோன்றி இனிச் செல்லலாம் எனப் பணித்தன. உடனே பற்றற்றது. ஆத்மீகத்துறையில் இறங்க எல்லாவற்றையும் துறந்து தவமியற்றி வீடுபேறுபெற்ருர். எனவே நிலையாமைக் கொள்கை இரண்டறங்களுக்கும் துணைசெய்கின்றது. அவர்தம் இல்லற இயல்பினையும் துறவறநெறியையும் பாராட்டிப் போற்றியுள்ள துதி நம்மைப் பரவசப் படுத்துகின்றது.

"மன்னுயிர்காத்தலான் மனம்விட்ட வருளினோடு
இன்னுயிருய்கென்ன வில்லறமு மியற்றினையே
புன்மைசாலற நீக்கிப் புலவர்கள் தொழுதேத்த
தொன்மைசால் குணத்தினற் றுறவரசாய்த் தோற்றினையே"

—யாப். விருத்–சூத். 84, உரைமேற்கோள்.

எனவே விரஷப தேவர் அமைத்த சமுதாயத் துறையில், பசி, பிணி, பகைகளின்றி "யாதும் ஊரே யாவருங்கேளிர்"என்ற மனப்பான்மையோடு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். செய் தொழில் வேற்றுமை யன்றி பிறப்பினு லனைவரும் ஒன்றென விளங்கினர். வாணிப கைத்தொழில் முதலியவை வளர்ந்தோங்கின வாணிபத் துறையில் அயல் நாடுகளுட தொடர்பு கொண்டிருந்தனர். இவைகளை சரித்திரம் சாற்றும்.

இவ்வாறு சிறப்புற்று விளங்கியவ அனைவரும் அறிவியக்கக் கொள்கையுடை யவரே. இவர்களைப் பொய்தீர் காட்சியோர் துகள்தீர் காட்சியோர், மையறுகாட்சியோர் மாசறுகாட்சியோர் என அழைப்பது பண் டைக்கால மரபாகும். மேலே கூறிய காட்சி களுக்கு நற்காட்சி என்றே அடியார்க்கு நல் லார் பொருள் கூறியுள்ளார். இக்காலத்தில் அத்தகையாளரை பகுத்தறிவாளர் என்று ழைக்கின்றனர். இந்நற்காட்சியின் நறுமணம் நம் பண்டைத் தமிழ்க் காவியங்களிலும் நீதி நூல்களிலும் வீசுவதைக் காணலாம்.

திருக்குறளில்

"இலம் என்று வெஃகுதல் செய்யார் புலம் வென்ற
புன்மையில் காட்சி யவர்"

"பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்"

"செயிரிற்றலைப் பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற்றலைப் பிரிந்த ஊன்"

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

"கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாதசெய்யார்
துளக்கற்ற காட்சியவர்"

என்றும் ; சிலப்பதிகாரத்தில் மாதவி தன் காதலனாகிய கோவலனுக்கு எழுதிய ஓலையில்

"கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி"

என்றும் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் மாடலன் செங்குட்டுவனைச் சந்தித்துப் பல அறவுரைகள் பகர்கின்றான். முடிவில் இவைகள் யாவும்,

"பொய்யில் காட்சியோர், பொருளுரை யாதலின்" எனக்கூறி முடிக்கின்றான். தமிழ்க் காவியங்களுள் தலை சிறந்து விளங்கும் சீவகசிந்தாமணியின் ஆசிரியர் அதன் உரை சிறப்புப் பாயிரத்தில்,

"பொய்யா மொழி புகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன்"

எனப் புகழப்பட்டுள்ளார்.

யாப்பருங் கலவிருத்தி ஆசிரியர் அதன் பாயிரத்தில்,

"துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
யளப்பருங் கடற்பெயரருந்தவத்தோனே"

என அழைக்கப்பட்டுள்ளார்.

பெருங் கதையில் நற்காட்சியைப் பற்றிய ஓர் நிகழ்ச்சி நம்மை மகிழ்ச்சியிலாழ்த்துகின்றது. அறுவகைச் சமயப்புலவர்களும் தம்முள் எதிர்த்து வாதம் செய்தலைக் காண பிரச்சோதன மன்னன் விரும்புகின்றான். அவ்வாறே அரசர் அவையில் அறுசமயத் தறிஞர்களும் கூடி வாதிக்கின்றனர். அவர்களில் சமண முனிவர் நற்காட்சியை முன்னிறுத்தி வாதிடுகின்றார். வெற்றி யடைகின்றார். இதனை கொங்குவேளிர்,

"கற்றோர் மொய்த்த முற்றவை நடுவண்
தாழாப் பெரும்புகழ்க் காளக்கடவுண்முன்
பாலக னென்னும் பண்ணவர் படிவத்துக்
காள சமணன் காட்சி நிறுப்ப
ஐம்பெருஞ் சமயமும் அறந்தோற்றன."

என விளக்குகின்றார்.

•

தெய்வந் தொழாள் கொழுநற் றொழு தெழுவாளைத் திருக்குறளிலே காண்கின்றோம். ஓமகுண்டம், சோமகுண்டம் மூழ்கிக் காமன் கோட்டத்துக்கடவுளைவழிபட மறுத்துக்கொழு நனையே தெய்வமாகக் கொண்டாடும் கற்புக் கடம்பூண்ட கண்ணகியின் மாண்பினை இளங் கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பல பகுதி களில் வியந்து புகழ்கின்றார். இங்கேயும் நமது கொங்குவேளிர் பெண்ணின் பெருமையைப் பேசும்போது பெண்களுக்கு அறிவு அதிலும் பகுத்தறிவு எவ்வளவு இன்றியமையாத் துணை யாக விளங்குகின்றதென்பதை,

> "எழுந்த — — —
> கையறு வீழினுங் கணவனல்லது
> தெய்வம் அறியாத் தேர்ந்துணர் காட்சிப்
> படிவக் கற்பிற் பல்கோ மகளிற்"

எனப் பாராட்டுகின்றார். வளையாபதியில்,

> "துக்கந் துடைக்கும் துகளறு காட்சிய
> நிக்கந்த வெடத்திருவடி கணங்களை"

என நற்காட்சியையுடைய துறவிகள் போற் றப்பட்டுள்ளனர். இவ்வாறே பகுத்தறிவியக் கத்தாரின் தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் நற்காட்சியும், நற்காட்சியுடையாரும் நன்கு பாராட்டப்பட்டுள்ளனர். அது மட்டுமன்று, இதற்கு முரணான கொள்கைகள் பல நமது

தமிழகத்தில் வந்து புகுந்தன. அவைகளை நமது பகுத்தறிவுக் கலைகள் ஏற்க மறுத்தும் கண்டித்தும் இருப்பதைப் புலவர் பெருமக்கள் காணலாம். எனவே, நற்காட்சி அல்லது பகுத்தறி வியக்கம் மிகமிகப் பழமையுடையதென்பதும், அது திராவிட நாகரிகமே என்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றன.

தமிழ் நாட்டுப் புலவர் பெருமக்களே! வரலாற்றுப் பேராசிரியர்களே! அறிஞர்களே! விரஷபதேவர் கொள்கை ஒரு சமூகத்திற்கோ ஒரு நாட்டாருக்கோ உரியதன்று. உலகிற்கே உரியது! எனவே அவர்தம் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட திருக்குறளையும் திருக்குறளை அடிப்படையாகக்கொண்டு விளங்கும் பகுத்தறி வியக்கக் கலைகளையும், வரலாறுகளையும் நடுவு நிலைமையோடிருந்து நன்கு ஆராய்ந்து உண்மையை விளக்கமாக வெளியிட்டு உதவி புரிவீர்களாயின் உலகமே புத்துயிர்பெறும். மக்களனைவரும் மாண்புறுவர். மன்னுயிரெல்லாம் இன்புறும்.

**திருவறம் வளர்க!**

# பிழை திருத்தம்

| பிழை | திருத்தம் |
| --- | --- |
| விரஷபதேவர் | விருஷபதேவர் |
| பக்கம் 7-ல் வைதீக | வைதிக |
| ,, 23-ல் கண்ணிகி | கண்ணகி |

# வரலாற்று நூல்கள்

உயர்திரு. மயிலை-சீனி வேங்கடசாமி அவர்கள்

இயற்றிய

1. சமணமும் தமிழும்,

2. மகாபலிபுரத்து ஜைன சிற்பம்

என்ற இரண்டு

ஆராய்ச்சி நிறைந்த அரிய நூல்களும்

விரைவில் வெளிவரும்.